# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2393 - 2024 ජූලි මස 12 වැනි සිකුරාදා - 2024.07.12

*2393 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 668 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 680 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, ஓகத்து மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூலை மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### ரத்கம பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 139 ஆவது பிரிவின் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, ரத்கம பிரதேச சபையால் 2024/05/22 ஆந் திகதி தீர்மான இலக்கம் L 577 இன் கீழ் இதன் பின்வருமாறு தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் அறியத் தருகின்றேன்.*

*பீ. டி. சயாமா புஷ்பமாலி,*
*செயலாளர்,*
*ரத்கம பிரதேச சபை.*

*ரத்கம பிரதேச சபை அலுவலகம்,*
*2024, யூன் 19.*

### தீர்மானம்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய பிரதேச சபை சட்டத்தின் 139 ஆவது பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், ரத்கம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குறிப்பிட்ட மதிப்பீட்டு வரி நோக்கத்திற்காக ஒரு வீடு, கட்டிடம், குடிசை, நிலம் அல்லது நிலத்தின் வருடாந்த மதிப்பை மதிப்பிடும் நோக்கத்திற்காக. பிரதேச சபை அதிகார எல்லைக்குள் செய்யப்படும் அபிவிருத்திப் பணிகளைத் திட்டமிடுவதற்கும் வசதி செய்தல் மற்றும் 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 3 மற்றும் 5 ஆவது பிரிவின் நோக்கங்களுக்காகவும் ஒரு தகவல் அமைப்பை உருவாக்குவதற்கு, ஒரு குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளர் மற்றும் குடியிருப்பாளர் அதன் வாடகை அல்லது வருடாந்த மதிப்பு அல்லது அதன் அளவு மற்றும் பிற விஷயங்கள் குறித்து அவ்வப்போது அறிக்கைகளை வழங்க உத்தரவிட வேண்டும் என்று ரத்கம பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

*07-363*

---

### கெஸ்பேவ மாநகர சபை

*1939 ஆம் ஆண்டின் முனிசிபல் கவுன்சில் ஆணை எண் 61 இன் 255 பிரிவு 52 இ கீழ் அறிவிப்பு*

*1939 ஆம் ஆண்டின் 255 ஆம் இலக்க முனிசிபல் கவுன்சில் ஆணை எண் 61 இன் பிரிவு 52 இன் அடிப்படையில் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டம் கெஸ்பேவ பிரதேச செயலகத்தின் கெஸ்பேவ மாநகர சபையின் எல்லைக்குள் அமைந்துள்ள இணைக்கப்பட்ட உப ஆவணத்தில் 1 முதல் 5 வரையான இலக்கம் கொண்ட வீதிகள் கெஸ்பேவ மாநகர சபைக்கு சொந்தமானவை மற்றும் கட்டுப்பாட்டில் உள்ளவை என்பது மக்களின் அறிவிற்காக பிரசுரிக்கப்படுகிறது.*

| துணை எண் | தெருவின் பெயர் | துணை எண் | சாலையில் | இறுதி மதிப்பீடு | இறுதி மதிப்பீடு எண் |
|---|---|---|---|---|---|
| 01 | அரவ்வல மேற்கு கிரா அலுவலர் சேவைப் பிரிவின் மேற்கு அரவ்வல வீரோதார மாவத்தை முதலாவது குறுக்குத் தெரு (முதலாவதாக வலது பக்கத்திற்கு வீதி) | மீட்டர் 232 | மீட்டர் 12 | 7/125 | 7/127B |

| துணை எண் | தெருவின் பெயர் | துணை எண் | சாலை யில் | இறுதி மதிப்பீடு | இறுதி மதிப்பீடு எண் |
|---|---|---|---|---|---|
| 02 | 565 பட்டகெத்தர வடக்கு கிராம அலுவலர் பிரிவின் சென்ரோஸ் பூங்காவின் முதலாவது குறுக்கு வீதி | மீட்டர் 182 | மீட்டர் 09/06 | 516/98 | 516/60A |
| 03 | 566 தம்பே கிராம அலுவலர் பிரிவின் கங்காராம விகாரை மாவத்தையில் ஆசிரி உயன வீதி | மீட்டர 68.6 | மீட்டர் 4.5 | 62/32 | 62/28 & 62/32/3 |
| 04 | 654 ஜம்புரலிய கிராம அலுவலர் பிரிவின் பட்டுவந்தர மடபாத்தை வீதியில் 4 ஆவது குறுக்குத் தெரு மற்றும் அதன் இடைவழி வீதி | மீட்டர் 79 | மீட்டர் 4.57-6.1 | 137 | 135/11 |
| | 4 ஆவது குறுக்குத் தெரு 2 ஆவது பகுதி ஆகிய வீதிகள் | மீட்டர் 33.5 | மீட்டர் 3.65 | 135/5 | 135/4 |

செயலாளர்
கஸ்பேவ மாநகர சபை.

ஆமை மாநகர சபை அலுவலகத்தில் உள்ளது,
2023 செத்தெம்பர் 28.

07-426

---

## மாத்தளை பிரதேச சபை

1893 ஆம் ஆண்டின் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் எதிர்ப்பைக் கோருதல்

### தீர்மானம்

2024 ஆம் ஆண்டில் மாத்தளை பிரதேச சபையின் மூலம் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் கீழ் விலங்கு அறுவை நிலையங்களை நடத்திச் செல்வதன் மீது எதிர்ப்புகளைக் கோரும் அறிவித்தலைக் கொண்ட 2024.04.05 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் IV(ஆ) பிரிவில் வெளியிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலும், குறித்த வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருந்த பலாபத்வல, கோன்கஹமுல, லொக்நகர் வத்தையில் வசிக்கும் ஆர்.எஸ்.எம். த சில்வா என்ற பெயருக்குப் பதிலாக பலாபத்வல், கோள்கஹமுல, லொக்நகர் வத்தையில் வசிக்கும் ஆர்.எஸ்.எம். த அல்விஸ் என்ற பெயர் திருத்தம் செய்யப்படுகின்றது, 1893 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மாத்தளை பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்துக்குள் 2024 ஆம் ஆண்டில் மாடு அறுவை நிலையத்தை நடத்திச் செல்வதற்கெனப் பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பில் எதிர்ப்புகள் கோரப்படுவதுடன், இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவது தொடர்பில் மாத்தளை பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதாயின், உரிய காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு, அதனை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 நாட்களுக்குள் இரண்டு பிரதிகளில் மாத்தளை பிரதேச சபையிடத்தில் தெரிவிக்குமாறு ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் மாத்தளை பிரதேச சபை தீர்மானித்துள்ளது.

### அட்டவணை

| விண்ணப்பதாரியின் பெயரும் முகவரியும் | விலங்கு அறுவை நிலையம் நடத்திச் செல்லப்படும் இடம் | விலங்கு வகை |
|---|---|---|
| ஆர்.எஸ்.எம். த அல்விஸ்<br>லொக்நகர்வத்த,<br>கோன்கஹமுல,<br>பலாபத்வல. | லொக்நகர்வத்த,<br>கோன்கஹமுல,<br>பலாபத்வல. | பன்றி |

07-100

# நானாவித அறிவித்தல்கள்

## பன்வில பிரதேச சபை

*2024 ஆம் ஆண்டிற்குரிய வரி அறவிடப்படும் அதிவிசேட வர்த்தமானியில் திருத்தங்களை மேற்கொள்ளல்*

*இலங்கைசனநாயகசோசலிசக்குடியரசின் 2023.11.24 ஆந் திகதி வெளியிடப்பட்ட 2360 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் IV(ஆ) பிரிவு உள்ளூராட்சி நிருவாகத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள பன்வில பிரதேச சபையின் 2024 ஆம் ஆண்டிற்குரிய வரி அறவிடப்படும் அதிவிசேட வர்த்தமானியில் திருத்தங்கள் 2024 மாச்சு மாதம் 06 ஆந் திகதி தீர்மான இலக்கம் 1028 இன் கீழ் பின்வரும் முறையில் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதென பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

கே.பீ.எஸ்.டி. பத்திரன,
செயலாளர்,
பன்வில பிரதேச சபை.

பன்வில பிரதேச சபை அலுவலகம்,
2024 மாச்சு 06.

01. பக்க இலக்கம் 09 இன் கீழ் "2023 ஆம் ஆண்டிற்காக வியாபார வரி அறவிடல் " என வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் "2024 ஆம் ஆண்டிற்காக வியாபார வரி அறவிடல் " என் திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

02. பக்க இலக்கம் 15 இன் கீழ் "2023 ஆம் ஆண்டிற்காக குப்பைக் கழிவுப்பொருள் வரி விதித்தல் " என வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் 2024 ஆம் ஆண்டிற்காக குப்பைக் கழிவுப்பொருள் வரி விதித்தல் என திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

03. 2024 ஆம் வருடத்திற்காக விளம்பர அறிவித்தல்கள் மீது கட்டணம் விதித்தல் தொடர்பாக பக்க இலக்கம் 18 மற்றும் 19 கீழ் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் கீழ்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

### 2024 ஆம் வருடத்திற்காக விளம்பர அறிவித்தல்கள் மீது கட்டணம் விதித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது பிரிவின் கீழ் பன்வில பிரதேச சபையின் செயலாளராகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, 2024 ஆம் ஆண்டிற்காக விளம்பர அறிவித்தல்கள் மீதான கட்டணம் விதிக்கும் நியமத்திற்குரிய 2023-09-27 ஆம் திகதி தீர்மான இலக்கம் 516 இன் கீழ், 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IV(ஆ) பிரிவில் வெளியிடப்பட்ட தீர்மானம் 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி 1046 ஆம் இலக்கம் கொண்ட தீர்மானத்தின் மூலம் பின்வரும் வகையில் திருத்தியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதெனப் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

### தீர்மானம்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் இரண்டாவது பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122, 126 ஆவது பிரிவுகளில் மற்றும் 1952 ஆம் ஆண்டு 06 ஆம் இலக்க நிலையான துணை விதியின் II ஆவது பிரிவில் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிருவாக விடய அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி நிருவாக விடய அமைச்சர் மூலம் 2016-02-23 ஆந் திகதி 1955/7 இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் IV(அ) பிரிவில் வெளியிடப்பட்டுள்ள நிலையான துணை விதியின் 13 ஆவது பிரிவில் விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான துணை ஏற்பாடுகள், அச்சட்டத்தின் III ஆவது பிரிவில் பன்வில பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, தழுவிய மற்றும் அதனை 2022-03-04 ஆம் திகதி 2270 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான துணை விதிகளின் ஏற்பாடுகளுக்கமைய பன்வில சபையின் அதிகார எல்லைக்குள் புலப்படும் வண்ணம் ஒரு பாதையில் /வீதியில் /நீரோடையில் /கடலில் அல்லது திறந்த வெளியில் எவ்வகையிலும் காட்சிப்படுத்தச் செய்யும் ஒரு சதுர அடிக்குக் குறையாத அறிவித்தல் அல்லது வர்த்தக விளம்பர நிர்மாணங்களுக்கெனப் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணமொன்று அறவிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கின்றேன்.

*04. 2024 ஆம் ஆண்டிற்கு வீடு மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி மற்றும் காணிகள் துண்டாக்கி விற்றல் மற்றும் ஏனைய தீர்மானங்கள் பற்றி பக்க இலக்கம் 21 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

**தீர்மானம்**

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் கீழ் வாசிக்கப்படும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 122 மற்றும் 126 ஆவது பிரிவுகளின் கீழ் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2024.01.01 ஆந் திகதி முதல் அமுலாக்கப்படும் வகையில் வீடுகள் மற்றும் ஆதனங்கள் மீதான அபிவிருத்தி மற்றும் காணிகள் துண்டாக்கி விற்பனை செய்தல் மற்றும் கட்டடங்கள், ஏனைய நிர்மாணங்கள் மேற்கொள்வதன் மீது பின்வரும் வழிமுறைகளைக் கையாளவும் புதிய கட்டணங்களை அறவிடவும் இத்தால் தீர்மானித்துள்ளேன்.*

**வீடு மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி செய்தல் மற்றும் காணிகளைத் துண்டாடி விற்பனை செய்தல்**

**கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்கள்**

*01. 750 சதுர அடி வரை (வதிவிடம்) ரூ. 2,000.00*

*02. 751 முதல் அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 100.00 வீதம் அறவிடப்படும்.*

*03. 750 சதுர அடி வரை (வர்த்தகம்) ரூ. 3,500.00*

*04. 751 முதல் அதிகரிக்கும் ஒவ்வொரு சதுர அடிக்கும் ரூ. 150.00 வீதம் அறவிடப்படும். (வர்த்தகம்)*

*05. எல்லைச் சுவர் 01 அடி நீளத்துக்கு ரூ.100.00*

*05. 2024 ஆம் ஆண்டிற்காக அனுமதியற்ற நிருமானங்களுக்காக தண்டத் தொகை அறவிடல் தொடர்பாக இலக்கம் 21 இன் கீழ் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.*

***06. அனுமதியற்ற நிருமாணங்களுக்கான தண்டத் தொகை***

*1. அனுமதியின்றி கட்டிடங்களை நிர்மானித்தல் /இணைத்தல் /மீண்டும் நிர்மானித்தல்*

| | (வதிவிடம்) ச.அ 1ற்கு | (வதிவிடமல்லாத) ச.அ. 1ற்கு |
|---|---|---|
| i. அத்திவார வேலைகள் மட்டும் நிறைவு செய்யப்பட்டுள்ள போது (மட்டம் வரை) | ரூ.50.00 | ரூ. 250.00 |
| ii. கூரை மட்டம் வரை நிர்மானித்தல் மற்றும் ஸ்லாப் உட்பட நிருமானிக்கப்பட்டுள்ள போது (கூரை அல்லாது) | ரூ.100.00 | ரூ. 700.00 |
| iii. கூரையுடன் சுவர்களை நிருமாணித்தல் | ரூ. 200.00 | ரூ.1000.00 |
| iv. குடியிருப்பதற்கு பொருத்தமான வகையில் நிருமாணங்களை நிறைவு செய்திருத்தல் | ரூ. 300.00 | ரூ. 1500.00 |
| v. மதில் சுவர் /தடுப்புச் சுவர் நிருமாணித்தல் | ரூ. 150.00 | ரூ. 350.00 |
| vi. தொலைத்தொடர்பு பரிமாற்றம், பரிவர்த்தனை மற்றும் ஆன்டெனா கோபுரம் நிருமாணித்தல் | | |
| • நில மட்டத்திலிருந்து நிருமாணித்தல் | ரூ. 150,000.00 | |
| • கூரையின் உச்சியினை நிருமாணித்தல் | ரூ. 100,000.00 | |

*2. இணக்கச் சான்றிதழ் (COC) பெற்றுக் கொள்ளாமல் குடியேறுதல்*

| | |
|---|---|
| ஒரு நாளைக்கு | ரூ. 50.00 |

06. 2024 ஆம் ஆண்டிற்காக அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது வரி விதித்தல் தொடர்பாக பக்க இலக்கம் 23 இல் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, குறித்த சட்டத்தின் 153 ஆவது பிரிவின் கீழ் பள்வில பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையப் பன்வில் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள கட்டடங்கள் அமைக்கவோ அல்லது நிரந்தர மற்றும் கிரமமான பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தவோ பொருத்தமான காணியொன்றில்

அ) கட்டடங்கள் எதுவும் நிருமாணிக்கப்படவில்லை எனின், அல்லது

ஆ) குறித்த காணி முறையாகப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படவில்லையாயின், அல்லது

இ) குறித்த காணியில் அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் உண்மையில் உட்படுத்தப்பட்டுள்ள காணியின் அளவு அல்லது பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள காணியின் அளவு குறித்த காணியின் முழு அளவின் 60% இலும் குறைவாக இருப்பின், குறித்த காணி அபிவிருத்தி செய்யப்படாத காணி எனக் கருதப்பட்டு, அவ்வாறான அபிவிருத்தி செய்யப்படாத காணிகள் மீது 2024 ஆம் ஆண்டுக்கென ஒவ்வொரு காணியினதும் முதலீட்டு அளவுப் பெறுமதியின் 0.05% இற்கான ஒரு வரியை விதித்து அறவிடவும், குறித்த தொகையைப் பன்வில் பிரதேச சபையில் செலுத்துதல் வேண்டுமெனவும் தீர்மானிக்கின்றேன்.

07. 2024 ஆம் ஆண்டிற்காக நிருவாக எல்லைக்குள் ஏதும் ஒரு காணியை ஏலதாரர் ஒருவரோ, தரகுமுகவரோ, அவரது வேலையாளோ அல்லது அவரது பிரதிநிதியோ ஏலவிற்பனை மூலமாக அல்லது வேறேதும் முறையில் விற்பனை செய்யும் தருணத்தில், வரி விதித்தல் தொடர்பாக பக்க இலக்கம் 23 இல் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, குறித்த சட்டத்தின் 154(1) ஆவது பிரிவின் கீழ் பன்வில் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையப் பன்வில் பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் அமைந்துள்ள எதும் ஒரு காணியை ஏலதாரர் ஒருவரோ, தரகுமுகவரோ, அவரது வேலையாளோ அல்லது அவரது பிரதிநிதியோ ஏலவிற்பனை மூலமாக அல்லது வேறேதும் முறையில் விற்பனை செய்யும் தருணத்தில், அந்தக் காணியை விற்றுப் பெறும் தொகையிலிருந்து 1% வீதத்துக்குச் சமமான வரியொன்றை விற்பனையாளர், ஏலதாரர், தரகு முகவர், அவரது வேலையான் அல்லது அவரது பிரதிநிதி பன்வில பிரதேச சபைக்குச் செலுத்துதல் வேண்டுமெனத் தீர்மானித்துள்ளேன்

08. 2024 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும் சேவைகளுக்கென கட்டணம் அறவிடல் தொடர்பாக பக்க இலக்கம் 24 இல் வெளியிடப்பட்டுள்ள விடயத்தில் பிரேரணை என்ற இடத்தில் தீர்மானம் என பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**தீர்மானம்**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 9 (3) ஆவது பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, குறித்த சட்டத்தின்கீழ் பன்வில பிரதேச சபையின் மூலம் 2024 ஆம் ஆண்டில் வழங்கப்படும் சேவைகளுக்கென நட்டணம் பின்வரும் அட்டவணைக்கு அமையக் கட்டணங்கள் அறவிடப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கின்றேன்.

09. 2024 ஆம் ஆண்டிற்காக ஒப்பந்தகாரர்களை பதிவு செய்யும் கட்டணம் தொடர்பாக பக்க இலக்கம் 24 இல் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றதென்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

06. ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்யும் கட்டணம்

| ஒப்பந்தத்தின் பெறுமதி (ரூ.) | அறவிடப்படும் கட்டணம் (ரூ) |
|---|---|
| 0-1,000,000.00 வரை | 1,000.00 |
| 1,000,001.00 2,000,000.00 வரை | 2000.00 |
| 2,000,001.00-5,000,000.00 வரை | 2500.00 |
| 5,000,000.00 10,000,000.00 வரை | 3000.00 |
| 10,000,000,00 இற்கு மேற்பட்ட | 3500.00 |

07-442